*கவனிக்க.-2021.07.30 ஆந் திகதிய 2239 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2240 - 2021 අගෝස්තු මස 06 වැනි සිකුරාදා - 2021.08.06

*2240 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1592 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1605 |


**கவனிக்க.-** (i) குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1589-B 82255-5,403 (2021/ 08)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்கருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்
சிங்கள மொழி/தமிழ் மொழி

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் 30 வயதிற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/ தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, யூலை 06.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே | கொழும்பு பிரிவின் கோட்டை பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு |
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பிரிவின் கிரேன்ட்பாஸ் பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு |
| கொழும்பு | மொரட்டுவ | மொரட்டுவ சல்பிட்டி கோறளை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு |

*08-29*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, யூலை 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | வலல்லாவிட்ட | கிழக்கு பஸ்துன் கோறளைப் பிரிவின் மீகஹாதென்ன பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | தொடன்கொட | நேபட பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மேற்கு பஸ்துன் கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |
| களுத்துறை | புளத்சிங்கள | கிழக்கு பஸ்துன் கோறளைப் பிரிவின் மஹாகம பிரதேசத்தின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை. |

08-30

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வயதிற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, யூலை 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு நகரப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |

08-31

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – கம்பஹா மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்த்ருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, யூலை 06.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கம்பஹா | மினுவன்கொட | உடுகம்பளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வடக்கு அலுத்குரு கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |
| கம்பஹா | ஜா-எல | தெற்கு அலுத்குரு கோறளைப் பிரிவின் ஜா-எல நகரப் பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |
| கம்பஹா | தொம்பே | தெகம்பொட பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கிழக்கு சியனே கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |
| கம்பஹா | தொம்பே | கிழக்கு சியனே கோறளைப் பிரிவின் தொம்பே பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |

*08-32*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2021, யூலை 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | மோதரை வடக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு பிரிவின் தெமட்டகொட பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | கொழும்பு | மருதானை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

08-33

## கல்வி அமைச்சு

### நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக சிறப்பு கல்வி, நாடகம் மற்றும் அரங்கியல் தொடர்பாக கல்விமானி பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II ஆம் தரத்திற்கு சிறப்பு கல்வி, நாடகம் மற்றும் நிகழ்த்து கலைகள் தொடர்பாக கல்விமானி பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக ஆண், பெண் இரு தரப்பினரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படும். இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிபடிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக இந்த வர்த்தமானி அறிவித்தலின் 8.4 வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைவாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2021.09.03 ஆகும்.

**குறிப்பு 1**: விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதம் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாகுதல் தொடர்பான முறைபாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதிநாள் வரையில் விண்ணப்பப் படிவங்கள் தாமதிப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரரினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02. **சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் முறைமை** :

2.1 இந்த அறிவித்தலில் 5.1 அல்லது 5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்பதனை பரிசீலிப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

2.2 பொது நேர்முகப்பரீட்சையில் தகைமைப் பெறுவோர் தொழிலில் முக்கியமாகக் கருதப்படும் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பில் விண்ணப்பதாரரிடம் காணப்படும் திறமையை கருத்திற்கொள்வதற்காக இந்த வர்த்தானி அறிவித்தலின் 9.2 வாசகத்திற்கமைவாக பிரயோகப் பரீட்சைக்குட்படுத்தப்படுவர். பிரயோக பரீட்சையின்போது விண்ணப்பதாரரினால் பெறப்பட்ட மொத்த புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலையை அடிப்படை யாகக் கொண்ட முறைமைக்கமைய நிலவும் வெற்றிட எண்ணிக்கைகளின் படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் நிராகரிக்கப்படுவர்.

2.3 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், அந்த வெற்றிடங்களைக் கொண்ட ஆவணம் பிரயோக பரீட்சையின்போது விண்ணப்பதாரர்களுக்கு காட்சிப்படுத்தப்படும். அதன் பிரகாரம் விண்ணப்பதாரர்களினால் அந்த சந்தர்ப்பத்தில் வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகள் தொடர்பாக தமது நியமனத்தை பெற்றுக்கொள்வதற்கு உள்ள விருப்பினை தொடரொழுங்கில் குறிப்பிட வேண்டும். மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் மாகாண இணக்கப்பாட்டுடன் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு 2** : பாடசாலை முறைமைக்கு அமைவாக நேர்முகப்பரீட்சையின் போது அதிக புள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் ஒரே பாடசாலையைக் கோரும் விண்ணப்பதாரர்கள் சிலர் சமமான புள்ளிகளை பெற்றிருக்கும் தருணங்களில் கல்விச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட புள்ளி வழங்கும் நடைமுறையின் படி பொருத்தமான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.4 மேற்கொள்ளப்படுவது பாடசாலை முறைமையின் அடிப்படையில் என்பதால் 05 வருடங்கள் பூர்த்தியாகும் வரையில் எவ்விதத்திலும் இடமாற்றங்கள் வழங்கப்படமாட்டாது.

2.5 வெற்றிடங்கள் நிலவும் விதம்

மாகாண பாடசாலைகள்

| மாகாணம் | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | பாடங்கள் |
|---|---|---|---|
| மத்திய | √ | √ | சிறப்பு கல்வி |
| வடக்கு | √ | √ | சிறப்பு கல்வி |

| மாகாணம் | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | பாடங்கள் |
|---|---|---|---|
| கிழக்கு | √ | √ | சிறப்பு கல்வி, நாடகம் மற்றும் அரங்கியல் |
| வட மத்திய | √ | √ | சிறப்பு கல்வி, நாடகம் மற்றும் அரங்கியல் |
| ஊவா | √ | √ | சிறப்பு கல்வி |

தேசிய பாடசாலைகள்

| சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | பாடங்கள் |
|---|---|---|
| √ | √ | சிறப்பு கல்வி, நாடகம் மற்றும் அரங்கியல் |

03. **சேவையில் அமர்த்துவற்கான விதி முறைகள் :**

i. இந்நியமனம் நிரந்தரமானதாகும். நியமனத்திற்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்காள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

ii. இப்பதவிக்கு நியமனம் பெறுபவர்கள் (03) ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட வேண்டியதுடன், அந்த (03) வருடத்திற்குள் முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01 /2014 மற்றும் அத்துறை சார் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

iv. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதி பிரமாணங்களுக்கும், திணைக்களம் சார் ஏனைய கட்டளைகளுக்கு இந்த நியமனம் உட்படும்.

v. 2014.10.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/ 38 ஆம் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும், அந்த சேவை பிரமாணக்குறிப்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்த நியமனம் உள்ளாகும்.

04. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கான பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 என்ற சுற்றறிக்கைக்கமைவாக GE 02-2016 இல் ரூபா 33,300.00-495 × 5 -680 × 5 - 825 × 7- 1,335 × 20 - ரூபா 71,650.00 (மாதாந்த) சம்பளம் உரித்தாகும். இச்சம்பள அளவின் 3 ஆவது படியான ரூபா 34,290.00 மாதாந்த சம்பளத்தில் அமர்த்தப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகின்றது.

05. **கல்வித் தகைமைகள்** .-

5.1 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பிற்கமைவாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கல்விமானி பட்டம் ஒன்றை பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

5.2 கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியை ஒரு பாடமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 3** : இலங்கை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த. (சா.தர) பரீட்சைக்கு இணைவாக ஏற்றுக்கொள்ளப்படும் பரீட்சை சித்தி எய்தவர்களுக்கும் கோர முடியும்.

06. **வயதெல்லை .-**

2021.09.03 ஆந் திகதிக்கு வயது

குறைந்தபட்ச வயது : 18

அதிகபட்ச வயது: 40

அதன் பிரகாரம் 2003.09.03 அல்லது அதற்கு முன்னதாக மற்றும் 1981.09.03 திகதிக்கு அல்லது அதற்குப் பிறகு பிறந்த திகதியை கொண்டவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றவர்களாவர்.

07. **ஏனையத் தகைமைகள்.-**

i. விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கத்தை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
iii. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு, பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக தேவைப்படும் அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
iv. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

08. **விண்ணப்பிக்கும் முறை.-**

8.1 விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக இருக்க வேண்டியதுடன், A4 அளவு கடதாசியின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரியினாலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும். 1.0 முதல் 4.0 வரையிலான தலைப்புகள் முதற்பக்கத்திலும் 5.0 முதல் எஞ்சிய தலைப்புகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கக் கூடியவாறு தமது விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு இணங்காத மற்றும் முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். (விணணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்)

8.2 விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலத்தை எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்படாது என்பதுடன் அது தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் குறித்து கவனிக்கப்படமாட்டாது.

8.3 ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

8.4 5.1. அல்லது 5.2 ஆகிய தகைமைகளுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2021.09.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "சிரேஷ்ட உதவிச் செயலாளர், ஆசிரியர் தாபனக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

8.5 மேலும் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.6 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்காக சிறப்பு கல்வி, நாடகம் மற்றும் அரங்கியல் தொடர்பான கல்விமானி பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவை 2-II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021" எனக் கட்டாயமாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

09. **நேர்முகப் பரீட்சை**

9.1 **பொது நேர்முகப் பரீட்சை** - பொது நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு 4**: நிறைவேற்றிக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் -
சேவை பிரமாணங்கள் மற்றும் அதற்குரியவாறு விளம்பரப்படுத்தப்பட்ட இந்த அறிவித்தலில் உள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என பரீட்சித்துப் பார்ப்பதற்காக உடல் ரீதியான தகைமைகளைப் பரீட்சித்தல்.

9.2 **பிரயோகப் பரீட்சை.-** கல்வி பாடத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் முன்னிலையில் விண்ணப்பதாரரினால் இனங்காணப்படும் தலைப்பொன்றின் கீழ் 05 நிமிடங்களுக்கு குறையாத நேரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கான புள்ளிகள் பின்வரும் முறையில் உரித்தாகும்.

| தொடர் இலக்கம் | பிரயோக பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் அலகுகள் | ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | தேர்ச்சிப் பெற தேவையான குறைந்தளவிலான புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசித்தல் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல்வளம் | 05 | 02 |
| 03 | தொடர்பாடலின் தெளிவுத்தன்மை | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்னிலைப்படுத்தும் முறைமை | 05 | 02 |
| | மொத்த புள்ளிகள் | 25 | 10 |

**குறிப்பு 5 :** நிறைவேற்றிக் கொள்வதற்கான குறிக்கோள்கள் - ஆசிரியர் தொழிலின்போது முக்கியமாகக் கருதப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பாக விண்ணப்பதாரருக்குரிய திறமையை மதிப்பீடு செய்தல்.

9.2.1 **பிரயோக பரீட்சை முறைமை**

(i) பிரயோக பரீட்சைக்காக 5 வினாடிகள் குறையாத நேரம் வழங்கப்படும்.
(ii) பிரயோக பரீட்சையில் பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை (25) ஆகும்.
(iii) பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு அலகுகள் தொடர்பாக குறைந்தபட்சம் 02 புள்ளிகள் பெற வேண்டும்.
(iv) பிரயோக பரீட்சையின் மதிப்பீடுகள் கல்வி பாடத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும்.

9.2.2 நியதிகளின் குறிக்கோள் :

(i) நோக்கம் மற்றும் பிரவேசித்தல்-
பாடத்தின் நோக்கததை தெளிவுபடுத்தல் மற்றும் பாடத்திற்கு பிரவேசிக்கும் இயலுமையை மதிப்பிடுதல்
(ii) ஆளுமை மற்றும் குரல்வளம் -
ஒரு ஆசிரியராக நல்ல ஆளுமையுடன் மற்றும் கற்பிக்கும் போது சிறப்பான முறையில் குரல்கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் இயலுமையை மதிப்பிடுதல்.
(iii) தொடர்பாடலின் தெளிவுத்தன்மை -
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது உரிய விடயங்களை விளைதிறனுடன் தொடர்புபடுத்தும் இயலுமையை மதிப்பிடுதல்.
(iv) நேர முகாமைத்துவம் -
வழங்கப்படும் கால எல்லைக்குள் இலக்கை நெருங்கும் திறனை மதிப்பிடுதல்.
(v) முன்னிலைப்படுத்தும் முறைமை-
இலக்கை அடைவதற்காக முன்னிலைப்படுத்தும் முறைமையினை நன்கு பயன்படுத்தும் இயலுமையை மதிப்பிடுதல்.

10. **விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள்**
விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும்போது பின்வரும் உப அட்டவணை 1 மட்டும் பயன்படுத்தவும்.

**உப அட்டவணை 01**

| மொழி மூலம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| சிங்கள மொழி | 2 |
| தமிழ் மொழி | 3 |
| ஆங்கில மொழி | 4 |

11. அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 9.0 தலைப்பின் கீழ் தமது திணைக்களப் பொறுப்பாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

12. நேர்முகப் பரீட்சைக்காக குறிப்பிட்ட தினத்தன்று பங்கேற்காத விண்ணப்பதாரர்கள் எந்த வகையிலும் மறுபரசீலனை செய்யப்பட மாட்டார்கள்.

13. அத்துடன் நேர்முகப்பரீட்சை தினத்தன்று சகல சான்றிதழ்களையும் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14. இந்த அறிவித்தலின் மூலமாக தழுவப்படாத விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும், ஏதேனும் வெற்றிடங்களின் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்ப அல்லது நிரப்பாதது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

15. சிங்களம், தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் ஒப்பீடு இன்மைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்.

கல்வி அமைச்சு,
இசுருபாய, பெலவத்த, பத்தரமுல்ல.
2021, யூலை 27.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக பயன்பாட்டுக்காக)

**கல்வி அமைச்சு**

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக சிறப்பு கல்வி, நாடகம் மற்றும் அரங்கியல் தொடர்பாக கல்விமானி பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II தரதத்திற்கு ஆட்சேர்ப்புச் செயதல் - 2021

**Recruitment of B.Ed. Graduates of Special Education and Drama and Performing Arts to Grade 2 – II of Sri Lanka Teachers' Service for Vacancies in Sinhala, Tamil and English Medium Teaching Existing in National and Provincial Schools of the Island -2021**

1.0 விண்ணப்பிக்கப்படும் மொழிமூலம் தொடர்பில் உப அட்டவணை 01 ஐப் பயன்படுத்தி குறியீட்டு இலக்கத்தை இக் கூட்டினுள் குறிப்பிடவும்.
மொழிமூலம்
(உரிய கட்டத்திற்குள் குறிப்பிடவும்)

2.0

2.1 முழுப்பெயர் -(ஆங்கிலகெப்பிற்றல்எழுத்தில்(உ.ம்:- AMRAKOON MUDIYANSELAGE NAMAL HERATH)
..........................................................................................................................................
..........................................................................................................................................

2.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னரும் குறிப்பிட்டுபெயர் (உ.ம்:- (HERATH A.M.N)
..........................................................................................................................................
..........................................................................................................................................

2.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) : ..........................................................................................
..................................................

3.0

3.1 தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) ..............................................................
..........................................................................................................................................

3.2 தொலைபேசி இலக்கம் :

கையடக்க : □□□□□□□□□□

நிலையான : □□□□□□□□□□

4.0

4.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : □□□□□□□□□□□□

4.2 திருமணமான 2/திருமணமாகாத 1 : (உரிய கட்டத்திற்குள் இலக்கத்தை எழுதவும்) □

4.3 பிறந்த திகதி : வருடம் : □□□□ மாதம் : □□ திகதி : □□

4.4 2021.09.03 ஆந் திகதிக்கு வயது: வருடங்கள் : □□ மாதங்கள் : □□ நாட்கள் : □□

4.5 பால் நிலை(பெண்-1 ஆண் -0) □ (உரிய கட்டத்திற்குள் இலக்கத்தை எழுதவும்)

5.0 கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள்:

| க.பொ.த. (சா.தர) பரீட்சை வருடம் ...... பரீட்சை சுட்டெண் ....... | | க.பொ.த. (உ. தர) பரீட்சை வருடம்...... பரீட்சை சுட்டெண் ...... |
|---|---|---|
| பாடம் பெறுபேறு | பாடம் பெறுபேறு | பாடம் பெறுபேறு |
| 1 | 6 | 1 |
| 2 | 7 | 2 |
| 3 | 8 | 3 |
| 4 | 9 | 4 |
| 5 | 10 | |

6.0 உயர்கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள்

6.1 பட்டம் : .........................................................

6.2 வழங்கிய பல்கலைக்கழகம் : .........................................................

6.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி: .........................................................

6.4 பட்டம் பெற்றுள்ள முக்கிய பாடம்/பாடங்கள் : .........................................................

6.5 பட்டம் பெற்றுள்ள மொழிமூலம்: .........................................................

7.0 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானது எனத் தெரிவிக்கிறேன். நான் இப்பதவிக்கு நியமனம் பெற்றதன் பின்னர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் என்னைச் சேவையிலிருந்து நீக்குவதற்கு கட்டுப்படுகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றியமைக்க மாட்டேன்

...................................... ...............................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

8.0 விண்ணப்பதாரியின் ஒப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி / செல்வி........................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதனையும் அவர் எனது முன்னிலையில் ....................... ஆந் திகதி ஒப்பமிட்டதாகவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியதாகவும் அற்குரிய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அதிகாரியின் கையொப்பம்.

திகதி : ..................................
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ..............................
பதவி : ...............................
முகவரி : ...............................
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்)

9.0 **விண்ணப்பதாரி அரசாங்க உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் உறுதிமொழி**

திரு. / திருமதி/ செல்வி ....................................................... அவர்களின் விண்ணப்பத்தை முன்னிலைப் படுத்துகின்றேன். அவர் இந்த அமைச்சின்/திணைக்களத்தின் நிரந்தர/தற்காலிக/சமயாசமய உத்தியோகத்தராக சேவை புரிவதாகவும்/இந்த பதவிக்காக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாதென்பதையும் தெரிவிக்கின்றேன்.

..................................................

திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரம் பெற்றவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்)

திகதி : .................................
பதவி : ................................
அமைச்சு/திணைக்களம் : ......................................

08-94

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2021

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III பதவிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிலவும் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதற்கான விண்ணப்பப்படிவங்கள் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்நிலை (Online) முறையினூடாக மாத்திரமே விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை மூலம் சமர்ப்பித்ததன் பின்னர் அதனை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை சான்றுப்படுத்தி, நிறுவனத் தலைவரின் சான்றுரையுடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2021" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 2021, ஓகத்து மாதம் 07 ஆம் திகதி முதல் 2021, செத்தெம்பர் 06 ஆந் திகதி 24.00 மணி வரை அனுப்பி வைக்க முடியும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் கட்டாயமானதாகும். அச்சுப் பிரதி தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாகக் குறிப்பிட்டு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியாது. இறுதித் தினம் வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

இப் பரீட்சையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைவாக இப் பரீட்சையை பிற்போடவோ அல்லது இரத்துச் செய்யவோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

(அ) விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் தினம் 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் கட்டாயமானதாகும் என்பதுடன், விண்ணப்பப் படிவம் தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாகக் குறிப்பிட்டு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியாது.

1. இவ் அறிவித்தலில் "நியமிப்புச் செய்யும் அதிகாரி" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவாகும் என்பதுடன் "சேவை" என்பதன் மூலம் கருதப்படுவது, இலங்கை திட்டமிடல் சேவையாகும்.

2. **ஆட்சேர்ப்பு முறை** .- எழுத்துமூலப் பரீட்சையின் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் தோற்றும் விண்ணப்ப தாரிகளிடையே ஒவ்வொரு எழுத்துமூல வினாப்பத்திரத்திற்கும் உரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை ஒன்றினால் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

இப் பதவிகளுக்கு நியமிப்பு செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** .-

(i) இப்பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுத் தொகைகள் செலுத்துதல் வேண்டும். ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு விண்ணப்பதாரி கட்டுப்படுதல் வேண்டும். இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட பதிற்கடமை காலப்பகுதிக்கு உட்படுவர்.

(ii) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாங்கள் உரியவாறு அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(iii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், 1670/32 ஆம் இலக்க மற்றும் 2010.09.10 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் இந் நியமனம் கட்டுப்படுகிறது.

(iv) பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் மொழிமூலம் ஆட்சேர்ப்பு மொழிமூலமாகக் கொள்ளப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்** .- 2016.02.25 ஆம் திகதிய 03/ 2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I பிரகாரம் இப்பதவிகளுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615-10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 110,895.00 (SL1-2016) ஆகும். இதற்கு மேலதிகமாக தாங்கள் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஏனைய படிகளுக்கும் உரித்துடையவர் ஆவீர்கள்.

5. **தகைமைகள்** .-

5.1 **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

5.2 **அனுபவம்** .- தமது நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்த மானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேற்குறித்த 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் சம்பளக் குறியீடு MN - 1 - 2016 அல்லது அதனிலும் கூடிய MN சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது SL - 1 - 2016 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/பதவியில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான, நிரந்தர மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.3 **உடல் ரீதியான தகைமைகள் .-** சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

5.4 **பிற தகைமைகள்.-**

(i) இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் எல்லா வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிக்கு இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவோ அல்லது தோற்றவோ அனுமதி கிடையாது.

(iii) விண்ணப்பிப்பதற்குரிய தகைமைகளைப் பெறுவதற்கு உடன் முந்திய ஐந்து வருடங்களினுள் உரிய தினங்களில் அனைத்து சம்பளவேற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) தகைமைகள் பரீட்சிக்கப்படும் தினத்தன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அவற்றிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றிற்கு உள்ளாகியிருத்தல் ஆகாது.

(v) இலங்கை திட்டமிடல் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு நபருக்கும் அனுமதி கிடையாது.

6. **எழுத்துமூலப் பரீட்சை .-** இப் பரீட்சையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைவாக இப் பரீட்சையை பிற்போடவோ அல்லது இரத்துச் செய்யவோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

6.1 **வினாப்பத்திரம் :**

| எண் | பாடங்கள் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்காகப் பெற வேண்டிய புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|---|
| 1 | கிரகித்தல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |
| 2 | விடய ஆய்வு | 100 | 40 | 01 மணித்தியாலம் |
| 3 | திட்டமிடல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |

6.2 **பாடத்திட்டம் .-**

**விடய இலக்கம் 01 - கிரகித்தல்**

பரீட்சார்த்திக்கு ஒரு நூலின் பகுதிகள் கொடுக்கப்படும். அத்துடன் சில வாக்கியங்கள் தொடர்பான மாற்றுவகையான பொழிவுகளுள் ஒன்று பகுதியின் வாசகங்களுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும். பரீட்சார்த்தி மிகவும் பொருத்தமான வசனத்தை தெரிவு செய்தல் வேண்டும். ஏனைய வசனங்கள் தொடர்பாக கொடுக்கப்படும் வினாக்கள் எவ்வளவு சிறப்பாக பரீட்சார்த்தி அவற்றின் பொருளைப் புரிந்து கொண்டார் என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்காக அமையும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**விடய இலக்கம் 02 - விடய ஆய்வு**

பரீட்சார்த்தியின் சிந்திக்கும் ஆற்றலையும் சிக்கல்களை தீர்த்துவைக்கும் திறன்களையும் பரீட்சித்துப் பார்ப்பதற்காக இந்த வினாப்பத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் பரீட்சார்த்திக்கு தற்போதைய இலங்கையின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் தொடர்பான புத்தகங்களிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிக்கல்கள் கொடுக்கப்பட்டு அவற்றிற்கான தீர்வுகளை வழங்குமாறு கேட்கப்படுவார். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**விடய இலக்கம் 03 - திட்டமிடல்**

பரீட்சார்த்தியின் திட்டமிடல் கோட்பாடுகள் மற்றும் திட்டமிடல் உபாயங்களின் அடிப்படை அறிவை பரீட்சித்துப் பார்ப்பதே இவ் வினாத் தாள் வழங்கப்படுவதன் நோக்கமாகும்.

6.3 **நேர்முகப் பரீட்சை :**

சாதாரண நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்படுவதுடன், ஒவ்வொரு எழுத்துமூல வினாப்பத்திரத்திற்கும் உரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளிடையே மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதன் போது அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**கவனத்திற் கொள்க .-** நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கொள்ளப்பட மாட்டாது.

6.4 **பரீட்சைப் பெறுபேறுகள் .-** எழுத்துமூலப் பரீட்சைக்கு தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் உள்ளடங்கிய பெறுபேற்று ஆவணம் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலமாக அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத் தளத்தின் மூலமாக பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

7. **பரீட்சை நிபந்தனைகள்.-**

I. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு தான் விண்ணப்பிக்கும் சேவைகளுக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு ஒரு மொழிமூலத்தை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

II. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தியாக்குதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதிக்கு மேலதிகமாக அச்சுப் பிரதியொன்றையும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். மென்பிரதி மற்றும் அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சை திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் உறுதிப்படுத்தும் (Verify) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், செல்லுபடியான விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது/ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது பற்றி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல் படிவத்தை (Common Instruction) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துகையில் இவ் அறிவுறுத்தல்களைக் கட்டாயமாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

III. இப் பரீட்சையின் முதலாவது பகுதியின் பரீட்சைக் கட்டணம் ரூ. 1200 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கியினதும் கடனட்டைகள் மூலம் ( Any Bank Credit Card)

(ii) இணையக் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய எந்தவொரு வங்கியினதும் பற்று அட்டைகள் மூலம் ( Any Bank Debit Card with Internet Payment Facility)

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Bank of Ceylon Online Banking Method)

(iv) எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை மூலமாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

(v) தபால் திணைக்களத்தின் தபால் அலுவலகத்தின் மூலம் (Postal Department Payment at Post Office)

**குறிப்பு.-** மேற்குறித்தமுறைகள்மூலம்கட்டணம்செலுத்தும்முறைபற்றிய அறிவுறுத்தல்கள் பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

IV. கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ் செய்தி (SMS) ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும். உரிய தொகையை செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

V. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச்செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

VI. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் ஒப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் தனது ஒப்பத்தை நிறுவனத் தலைவர் மூலம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் சான்றுப்படுத்தல் வேண்டும்.

**குறிப்பு** : அனுமதியட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தன்று தனது ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை மாத்திரமே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதியட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற அல்லது பதவியொன்றிற்குத் தகைமை பெற்றுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க கணிப்பீட்டின் படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலை முறை மூலம் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதியட்டைகள் விநியோகிக்கப்படும். அவ்வாறே அனுமதியட்டையின் பிரதியொன்றை தரவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகள் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளுக்கு அனுமதியட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி ஒருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவுகையில் விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி என்பவற்றை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேற்குறித்த விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமும் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை 0112784232 எனும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் வினவுவது அதிக பலனைத் தரக்கூடியதாக அமையும். அவ்வாறு வினவுகையில் பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்குத் தம் வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்துகையில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதி, தபாலில் அனுப்பும் போது பெற்றுக் கொண்ட பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

VIII. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த சட்டதிட்டங்களை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

IX. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதே போன்று பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் உத்தியோகத்தர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரிகளை இனங்காணக் கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

8. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை** : எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியினால் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது என்பதைத் தெரிந்திருந்தும் அதனை சமர்ப்பித்திருப்பது தெரியவருமாயின், அல்லது ஏதேனும் முக்கியமானதொரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

நியமனத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறித்த விடயங்கள் தெரியவருமாயின் குறித்த நியமனத்தின் கீழ் சம்பளம் அல்லது கொடுப்பனவாக அரசாங்கம்/மாகாண சபையினால் செலுத்தப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளும் மீள அறிவிடப்படும்.

9. இவ் ஒழுங்குவிதிகளில் ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை அல்லது இசைவின்மை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய.

ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2021, யூலை மாதம் 30.

8-168

---

## இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பரீட்சையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நவெம்பர் மாதம் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இப் பரீட்சையை பிற்போடவோ அல்லது இரத்துச் செய்யவோ செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

01. இவ் அறிவித்தலில்

அ. "செயலாளர்" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, "பொது நிர்வாக விடயத்துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்" ஆவார்.

ஆ. "சேவை" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, வேறு விதமாக தனித்துவமாகக் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களில் "இலங்கை நிர்வாக" சேவையாகும்.

02. இப் பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது.

அ. இப்பரீட்சைக்கான விண்ணப்பபடிவங்களை 2021, ஓகத்து 07 ஆந் திகதி முதல் 2021, செத்தெம்பர் 06 திகதி 24:00 மணி வரை நிகழ்நிலை (Online) முறையினூடாக சமர்ப்பிக்க முடியும்.

**எழுத்துமூலப் பரீட்சை** - இப் பரீட்சையானது பின்வரும் நான்கு (04) வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்தது.

i. பொது விவேகம்
ii. இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் உலகளாவிய போக்குகள்
iii. அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் சார்ந்தவை)
iv. அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடல் சம்பந்தமாக)

**நேர்முகப் பரீட்சை.-** எழுத்துப் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டவாறு போதுமான உயர் மொத்தப் புள்ளிகளை பெற்றுள்ள பரீட்சார்த்திகளுக்கு பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சைக்கான திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி செயலாளரினால் நிர்ணயிக்கப்படும்.

03. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 42 ஆகும், வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

04. **சேவை நிபந்தனைகள் .-**

4.1 அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும்,1842/2 ஆம் இலக்க மற்றும் 2013.12.23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், குறித்த சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட அல்லது எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக் கோவையின் மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் அமைவாகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுத் தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

4.3 இந் நியமனமானது ஒரு வருட கால பதில் கடமை நிலைக்கு உட்பட்டது. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்களினுள் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கை பிரகாரம் பதவிக்கு நியமனம் பெற்று மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி அதிகாரம் உண்டு.

05. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** .- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I பிரகாரம் இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL - 1 - 2016) ஆகும். இதற்கு மேலதிகமாக தாங்கள் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஏனைய படிகளுக்கும் உரித்துடையவர் ஆவீர்கள்.

06. **ஆட்சேர்ப்புத் தகைமைகள்**-

(அ) i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.
ii. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்.
iii. நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குமான போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(ஆ) **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் சம்பளக் குறியீடு எம்.என். 2-2016 அல்லது அதிலும் கூடிய எம். என். சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் அல்லது எஸ்.எல். 1-2016 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் சேவையில்/பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்.

அல்லது

ii. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் சம்பளக் குறியீடு எம். என். 2-2016 அல்லது அதிலும் கூடிய எம்.என். சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் அல்லது எஸ்.எல். 1-2016 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் சேவையில் /பதவியொன்றில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்.

**குறிப்பு** :

1. பட்டம் நடைமுறைக்கு வரும் தினமானது தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முந்தையதொரு தினமாக இருத்தல் வேண்டும்.

2. மேற்குறித்த காலம் கணக்கிடுகையில் அரசாங்க சேவை மற்றும்/அல்லது மாகாண அரசாங்க சேவைகளின் உரிய தொடர்ச்சியான சேவைக் காலங்களின் கூட்டுத்தொகை கணக்கிடப்படும்.

(இ) **வயது மற்றும் பூர்த்தி செய்திருக்க வேண்டிய வேறு தகைமைகள்**

i. தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினத்தன்று வயதெல்லையானது ஐம்பத்து மூன்று (53) வருடங்களுக்கு மேற்படலாகாது. அதற்கமைய 1967.12.31 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுகின்றனர்.

ii. மேற்குறித்த 6 (ஆ) இல் குறிப்பிடப்பட்ட சேவையில்/பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.

**குறிப்பு** : தற்போது உரிய நியமன அதிகாரியினால் சேவையை/ பதவியை நிரந்தரமாக்குவதற்குரிய கடிதம் வழங்கப்பட்டிராது விடினும் பரீட்சை அறிவித்தலின் 06 ஆம் பந்திக்கு அமைய பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள மற்றும் சேவைப்பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு நடைமுறை படி சேவையில் நிரந்தரமாக்குவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். இருப்பினும் குறித்த உத்தியோகத்தர்கள்,

1. தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று சேவையில் நிரந்தரமாக்குவதற்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. அவ் உத்தியோகத்தர்கள் இப் பரீட்சையில் சித்தியடைந்து சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெறுவார்களாயின் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட கடிதத்தைக் கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். (நிரந்தரமாக்கப்படும் திகதியானது தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னராக இருக்குமாறு நடைமுறைப்படுதல் வேண்டும்.)

iii. தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினத்தன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உள்ளாகியிருத்தலாகாது.

(ஈ) **தகைமைகள் பற்றிய வரையறைகள்.-**

(i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு (02) அமர்வுகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதி கிடையாது. (முந்தைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் விண்ணப்பதாரிகள் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சைகளுக்குத் தோற்றிய அமர்வுகளின் எண்ணிக்கை ஏற்புடையதாகாது.)

(ii) இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை 2020.12.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிக்கு இப் போட்டிப் பரீட்சைக்கு தோற்ற அனுமதி கிடையாது.

07. **பரீட்சைக் கட்டணம்** .- பரீட்சைக் கட்டணம் ரூ. 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும் :

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டைகள் மூலம் ( Any Bank Credit Card)
ii. இணையம் மூலம் கொடுப்பனவு செய்ய முடியுமான எந்தவொரு வங்கி வரவட்டை மூலம் (Any Bank Debit Card with Internet Payment facility)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Bank of Ceylon Online Banking Method)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை மூலமாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)
v. தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலமும் (Postal Department Payment at Post Office)

**குறிப்பு**.- மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

* கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ் செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

08. **விண்ணப்பிக்கும் முறை** .-

(அ) விண்ணப்பப்படிவங்கள் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்நிலை (Online) முறையினூடாக மாத்திரமே விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை மூலம் சமர்ப்பித்ததன் பின்னர் அதனை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை சான்றுப்படுத்தி,ஏற்புடையதாயின் நிறுவனத் தலைவரின் சான்றுரையுடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் கையேற்கும் இறுதித் திகதி 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதியாகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் கட்டாயமானதாகும். அச்சுப் பிரதி தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாகக் குறிப்பிட்டு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியாது. (இறுதித் தினம் வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.)

(ஆ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது காணப்பட்ட விண்ணப்பதாரிகளின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையது என்பதுடன், விண்ணப்பங்கள் அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் குறித்து கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(இ) ஒவ்வொரு அம்சமும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போனமை மற்றும் தாமதமானவை தொடர்பிலான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதியட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி ஒருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சை திணைக்களத்திற்குஅறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரியாயின், குறித்த விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமும் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை அவ் அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்தின் ஊடாக பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் வினவுவது அதிக பலனை தரக்கூடியதாக அமையும். மேலும் பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படும் தேவையான தகவலை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரி தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

09. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**-

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க கணிப்பீட்டின் படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலை முறை மூலம் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதியட்டைகள் விநியோகிக்கப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்கு விதித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் உரிய அனுமதியட்டையில் கையொப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம் மண்டபத்திற்கு சமுகமளிக்கும் தினத்தில் அதன் மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இவ் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது குறித்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் ஆளாக நேரிடும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதியட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்** .- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதே போன்று பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரிகளை இனங்காணக் கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

11. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை** .- பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது என்பதைத் தெரிந்திருந்தும் அதனை சமர்ப்பித்திருப்பது தெரியவருமாயின், அல்லது ஏதேனும் முக்கியமானதொரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய செயலாளரினால் தீர்மானிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம்**-

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் ஆட்சேர்ப்பு மொழிமூலமாகக் கொள்ளப்படும்.

**குறிப்பு** :(i) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

14. **ஆட்சேர்ப்பு முறை**.-

14.1 **எழுத்துமூலப் பரீட்சை**.- பின்வரும் பாடங்களைக் கொண்டமைந்த நான்கு (04) வினாப்பத்திரங்களிலான எழுத்துமூலப் பரீட்சையொன்று நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெறத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் பின்வருமாறு :

| | பாடம் | புள்ளிகள் | சித்தியடைவதற்காகப் பெற வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | பொது விவேகம் | 100 | 50 |
| 2 | இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் உலகளாவிய போக்குகள் | 100 | 50 |
| 3 | அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் சார்ந்தவை) | 100 | 50 |
| 4 | அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடல் சம்பந்தமாக) | 100 | 50 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

14.2. **சாதாரண மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

(i) நேர்முகப் பரீட்சையானது சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என இரண்டு (02) பகுதிகளைக் கொண்டமைந்தது.

(அ) **சாதாரண நேர்முகப் பரீட்சை**

(i) மேற்குறித்த இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பற்றிய வரையறைகளுக்கு அமைவாக உள்ளாரா என்பது பற்றி பரிசீலிப்பதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) சாதாரண நேர்முகப் பரீட்சைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஆ) **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

(i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரிகளின் முகாமைத்துவ திறமை, தலைமைத்துவப் பண்புகள் மற்றும் தொடர்பாடல் திறமை மற்றும் ஆளுமையை அளவிடுவதற்காக பின்வரும் நடைமுறைக்கு அமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதன் போது பெற்றுக் கொள்ளக் கூடிய உச்சப் புள்ளிகள் இருப்பத்தைந்து (25) ஆகும்.

| | துறை | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 01 | முகாமைத்துவ திறமை | 10 |
| 02 | தலைமைத்துவப் பண்புகள் | 05 |
| 03 | தொடர்பாடல் திறமை | 05 |
| 04 | ஆளுமை | 05 |
| | மொத்தம் | 25 |

(ii) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது ஐம்பது (50%) புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் சகல பாடங்களிற்கும் மொத்தமாக உச்ச புள்ளிகளைப் பெறுகின்றவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெறுவர். தகுதி பெற்ற பரீட்சார்த்திகளில் நிரப்பப்பட எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களுக்கிணங்க ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த எண்ணிக்கைக்குச் சமனானதோர் எண்ணிக்கையானோர் மற்றும் எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆனோர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையினை தொகையிடவில்லையாயின் அவ்வாறு தகுதிபெற்ற பரீட்சார்த்திகளின் அத்தகைய எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(iii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் தகைமைகளைப் பரிசீலிப்பதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், அதன் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது ஆட்சேர்ப்பிற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கான தகைமையைப் பெறுவர். மேற் குறித்தவாறு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுள் குறிப்பிட்ட தொகையினர் கட்டமைக்கப்பட்ட பரீட்சைக்கு அழைக்கப் படுவதற்கான தகைமையைப் பெற்றுக் கொள்ளாவிடினும், அவ்வாறு தகைமையைப் பெறாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீளவும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

(iv) வெற்றிட எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையை ஆட்சேர்ப்பு செய்கையில் எழுத்துமூலப் பரீட்சையின் போது பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய உச்சப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி தொடக்கம் திறன் ஒழுங்கிற்கு அமைவாக சேவையின் தரம் மூன்றுக்கு (III) ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**கவனத்திற் கொள்க.**- நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கொள்ளப்பட மாட்டாது.

14.3 பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தபால் மூலமாக அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தள முகவரியினூடாக தனிப்பட்ட முறையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

15. **எழுத்துமூலப் பரீட்சையின் பாடத்திட்டம்** .-

(01) **பொது விவேகம்** .- எண்கள், மொழிசார் மற்றும் உருவம் வடிவங்கள், இடைத்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள்கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிவுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம் : 1 1/2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

(02) **இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் உலகளாவிய போக்குகள்**.- இலங்கை மற்றும் உலகளாவிய சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய பரீட்சார்த்தியின் விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியான சிந்திக்கும் ஆற்றல், முன்னுரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பாரக்கப்படுகின்றது.

(காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள் வினாக்கள் மற்றும் கட்டுரைகள் வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

(03) **அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு** I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை)
அரசாங்க சேவையில் வேறுபட்ட சுற்றுச்சூழல்களில் தோன்றக்கூடிய சிக்கலொன்றை அல்லத ஒரு சிலவற்றை தொடர்புபடுத்திக் கொண்டு உருவாக்கப்பட்ட சம்பவமொன்றை/சம்பவங்களை பரீட்சார்த்தியிடம் முன்வைத்து பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆக்கபூர்வமான சிந்தனை சக்தியையும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கான ஆற்றலையும் தபானவிதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுடன் தொடர்புடையதாக அரசாங்க சேவையின் நடைமுறைகள் சார்ந்ததாக அளவிடுதலே இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள் வினாக்கள் மற்றும் கட்டுரைகள் வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

(04) **அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு** II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது)

தரப்பட்ட தலையங்கள்/தொனிப் பொருட்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவு செய்யும் ஒரு தலையங்கம்/தொனிப்பொருட்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி காட்டுகின்ற தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் அல்லது நிருபணமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் முக்கிய கருத்துக்களைத் தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் அவருக்குள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை அல்லது இசைவின்மை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2021, யூலை மாதம் 30.

8-169

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | துபால்செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

***அட்டவணை - 2021***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 06.08.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 22.07.2021 |
| | | வெள்ளி | 13.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.07.2021 |
| | | வெள்ளி | 20.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.08.2021 |
| | | வெள்ளி | 27.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.08.2021 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2021 |
| | | வெள்ளி | 10.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2021 |
| | | வெள்ளி | 17.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2021 |
| | | வெள்ளி | 24.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.09.2021 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2021 |
| | | வெள்ளி | 08.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.09.2021 |
| | | வெள்ளி | 15.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2021 |
| | | வெள்ளி | 22.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2021 |
| | | வெள்ளி | 29.10.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2021 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.